# சித்தர் நெறி

**சீவநெறி -> சிவநெறி -> சைவநெறி -> மெய்யான இந்துமதம்**

## 12வது ஞானாச்சாரியார்
## ஞானகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்
### அவர்கள் அருளியவை





**12வது ஞானாச்சாரியார்**

**ஐப்பசி மாத வெளியீடு**
**(November 2012)**
**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான**
**இந்துமத ஆண்டு 43,73,113**

www.gurudevar.org; Email: indhuism@gmail.com



11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார். இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகச் செயல்பட்டு தமிழின அருட்பேரரசாகப் பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - கி.பி.1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையில் வழங்குகின்றோம்.

## உள்ளுறைத் தலைப்புக்கள்

1. தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்?!?!?

2. தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்

3. தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?

4. தமிழின விடுதலையே உலக ஆன்மீக விடுதலை

---

தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.

# தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்?!?!?!

1) இம்மண்ணுலகிலுள்ள எல்லா இனத்தவர்களும் வரலாற்றுப் போக்கிலே உயர்ச்சியையும், தாழ்ச்சியையும்; வெற்றியையும், தோல்வியையும்; உரிமை-வாழ்வையும், அடிமை-வாழ்வையும்; ... மாறி மாறித்தான் பெற்றுள்ளார்கள். ஆனால், இந்தத் தமிழர்கள் மட்டுமே ஒட்டு-மொத்தமாகப் பெற்றிட்ட மிகப்பெரிய சமய சமுதாய வீழ்ச்சியிலிருந்து மீட்சியே பெறவில்லை; உயர்ச்சியே அடையவில்லை. ஆனால், இவர்களுக்கிடையில் குறிப்பிட்ட வட்டாரத்தார் மட்டுமே (தென் மண்டலத்தார், வடமண்டலத்தார், தொண்டை மண்டலத்தார், கீழைப்புலத்தார், மேலைப்புலத்தார், நடுநாட்டார், மலைநாட்டார், பேரியாற்றூர், வைகையாற்றூர், காவிரியாற்றூர், வேகவதியாற்றூர்,...) குறிப்பிட்ட சிலகாலம் மற்ற வட்டாரத்தார்களை அரசியலால் அடக்கி ஆண்டு உயர்ச்சியும், உரிமையும் பெற்று வெற்றி-வாழ்வு வாழ்ந்ததாகத் தெரிகின்றது. இதைத் தவிரத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக அரசியலில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் பெற்று முயன்று மிகப் பெரிய வெற்றிகளைப் பெற்று உயர்ச்சியையும், உரிமைவாழ்வையும் நெடுங்காலம் அடைந்திருந்ததாகத் தெரியவில்லை. சங்ககாலத் தனியரசுகள், பிற்காலச் சோழப் பேரரசு, பிற்காலப் பாண்டியப் பேரரசு, ... என்று விரல் விட்டு எண்ணக் கூடியவைதான் தமிழரின் அரசியல் வெற்றிக்குச் சான்றாக இருக்கின்றன. அதுவும் இந்த ஒரு சில தமிழினப் பேரரசுகளின் காலத்திலும்; தமிழ்மொழி மதத்துறையில் உரிமையையும் பெருமையையும் இழந்து தீண்டாமை நிலையையே பெற்றிருந்தது. அதாவது, தமிழினப் பேரரசுகளின் காலங்களிலும் சமசுக்கிருதம்தான் மதத்துறையில் ஆட்சியும் உயர்ச்சியும் உரிமையும் பெருமையும் பெற்று விளங்கிடும் மொழியாக இருந்திட்டது.

2) “.. கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழித்தே; இமயமலைக் கணவாய்கள் வழியாக ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு; தோலாலான கோவணமும், கோலும், குடுவையும் குடுமியுமாகப் பால்வண்ணப் பழுப்பு மேனிக் கூட்டத்தார் இந்து மத அருளாளர்கள் கொலு இருந்த

இமய மலையின் மடிப்பகுதிகளுக்கும், அடிப்பகுதிகளுக்கும், ஆற்றங்கரைப் பகுதிகளுக்கும் வந்தனர். இவர்களுடைய பெண்டிர்களின் அழகும், பல்வேறு வகையான ஆட்டம், பாட்டு, கூத்து, விளையாட்டு முதலியவைகளும் இவர்களை எங்கும் வரவேற்புப் பெறவும், வாழ்வுறவும் செய்தன. இவர்களால் கிடைத்த பால், வெண்ணை, ... முதலிய பொருள்களுக்காகவும்; இவர்களுடைய ஆண்களின் பணிவான உழைப்பையும் பெரிதும் விரும்பிய இந்து (சிந்து), யமுனை, கங்கை... முதலிய ஆற்றங்கரைச் சிற்றரசர்களும், பேரரசர்களும், பொதுமக்களும் இவர்களை விரும்பி ஏற்றுக் கொண்டிட்டார்கள். ஆனால், சூழ்ச்சித் திறமும், இனக் கட்டுப்பாடும், எதையும் தியாகம் செய்து வாழத் தெரிந்த பண்பும்,... உடைய இவர்கள் விரைந்து அரச குடும்பத்தார்கள் முதல் ஆண்டிகளின் கூட்டம் வரை ஊடுருவல் செய்து செல்வாக்கான நிலையான வாழ்வைப் பெற்று விட்டார்கள். இவர்கள் எப்போதுமே 'கண்கொத்திப் பாம்பு போல்' எதிரிகளை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள். **இவர்கள் எங்கிருந்தாலும் சரி, அங்கு உள்ளவர்களுக்கு இடையில் பிரிவும், பகையும், வேற்றுமையும், வேறுபாடும், போட்டியும், பொருமையும் ... அருகம்புல் போல் பசுமையாக முளைத்துக் கொண்டே இருக்குமாறு செய்திடுவார்கள்**. இதே நேரத்தில் இவர்கள் ஆயிரமாயிரம் கல் தொலைவு பிரிந்திருக்கக் கூடிய தங்களது வடஆரிய இனத்தவர்களுடன் எல்லாம் நெருங்கிய அந்தரங்கமான உறவை வளமாகவும், வலிவாகவும் பசுமையாகவும் வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அதனால், இவர்கள், தங்களுடைய இனத்தவரில் யாருக்கேனும் ஊசிமுனையளவு பாதிப்பு ஏற்பட்டால் கூட உடனே கடல்போல் சீறி எழுந்து விரைந்து முழுமையாகச் செயல்பட்டுப் பாதுகாப்பு வழங்கிடுவார்கள். இப்படிப்பட்ட இவர்கள் தெய்வீகத் தமிழகத்தையே தங்களின் நாற்றங்காலாகவும், தலைமைப் பீடமாகவும் ஆக்கிக் கொண்டு விட்டார்கள். எனவேதான், தமிழருக்கு மட்டும் தாழ்ச்சி என்றென்றும் இருந்து கொண்டு -தான் இருக்கும். எனவே,

**இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்களைத் திருத்தித் தமிழர்களோடு எல்லா வகையிலும், நிலையிலும் இரண்டறக் கலந்திடும்படிச் செய்திடலே சிறந்த செயலாகத் தெரிகிறது. இதற்கு அவர்களின் சமசுக்கிருத மொழிவெறி, வேத மதவெறி, இனவெறி, ... முதலியவைகள் முழுமையாக அகற்றப்படல் வேண்டும்**. அது இயலுமா? அதற்காக அருள்வழியில் அமைதியாக முயலுவது தோற்குமேயானால்; மாபெரும் சமய சமுதாய அரசியல் போர்களே நிகழ்ந்து குருதி மழை பெய்துதான் தமிழினப் பயிர் செழிக்க நேரிட்டிடும். இதனைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்பட வேண்டியவர்கள்தான் தமிழினத்தின் தலைவர்கள், குரு, குருமார், குருக்கள், பூசாறி, குருதேவர், ... முதலானோர்கள்...." == தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரி யாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் **குருபாரம்பரிய வாசகம்**.

இதே வாசகம், 'அரச பாரம்பரியம்', 'இலக்கியப் பாரம்பரியம்' எனும் இரண்டிலும் பலமுறை திரும்பத் திரும்ப இவராலேயே எழுதப் பட்டிருக்கின்றன. இவ் வாசகத்தின் பொருளுக்கு முன்னோடியாக, இதே கருத்துடைய குருபாரம்பரிய, அரச பாரம்பரிய, இலக்கியப் பாரம்பரிய வாசகங்கள் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூரர் அவர்களால் எழுதப் பட்டுள்ளன.

குறிப்பு:- இப்படிப் பத்தாவது, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதிகள் 'தமிழருக்கு மட்டும் தாழ்ச்சியேன்?' என்ற கருத்தோட்டத்தில் வழங்கியுள்ள அநுபவப் பூர்வமான ஆராய்ச்சிப் பூர்வமான கருத்துக்கள்; இவர்களின் 'குருபாரம்பரியம்', 'அரச பாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்' எனும் மூன்று மாபெரும் நூல்களிலும் தெளிவாகத் திரும்பத் திரும்பப் பலமுறை வலியுறுத்தியும் எழுதப் பட்டிருக்கின்றன. எனவே, **இம்மூன்று நூல்களும் இந்த**

**இருபதாம் நூற்றாண்டின் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தலைவர்கள் அனைவருமே ஏறத்தாழத் 'தமிழினத் தாழ்ச்சிகளை' அகற்றிட எடுத்திட்ட முயற்சிகளில் மாபெரும் தோல்விகளையே பெற்றுள்ளதற்கு உரிய அடிப்படைக் காரணத்தைத் தெளிவாக்குகின்றன.** இவற்றின் அடிப்படையிலேயே சிந்தித்துத்-தான் யாம், சித்தர் காகபுசுண்டர் எனப்படும் காக்கா வழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை *(முடிகணம் {முடிகண்ட சோழபுரம்} கரூர் வட்டம், திருச்சி மாவட்டம்)* தமிழினம் பற்றிய பேருண்மைகளை விளக்குகிறோம். இங்கு தமிழர் பற்றிக் கூறுவனதான் உடனடித் தேவை.

3) தமிழ => 'திராவிட' என்ற சொல் தமிழினத்தையும், இதிலிருந்து பிறந்த மலையாள, தெலுங்கு, கன்னட, துளுவ, … எனப் பட்டியலிடப்படும் இந்திய மொழிகள் அனைத்துக்கும் உரிய மக்களைக் குறிக்கும். அதாவது, இன்றுள்ள இந்தியர்கள், இந்த இந்தியா (= இந்துமத நாடு) தோன்றுவதற்கு முன்னரேயே இன்றுள்ள தென்னிந்தியாவோடு இணைந்து இந்து மாக்கடலில் இருந்த இளமுறியாக் (இளமை மாறுத நிலப்பகுதிகளை மிகுதியாக உடையது = Loose Soil => சதுப்பு மண், பொய் மண், …) கண்டத்து வாழ்ந்த தமிழ் இனத்தவரே ஆவர். மூன்று முறை நெடிய இடைவெளிகளுக்கு ஒரு முறையாக நிகழ்ந்த கடல் கோள்களால் இளமுறியாக் கண்டத்தின் முக்கால் பகுதிக்கு மேல் சிதைந்து போயிற்று. எனவேதான், அங்கு வாழ்ந்த இம் மண்ணுலகின் முதல் இனமான தமிழினத்தவர் இன்றுள்ள உலகின் எல்லாப் பகுதிகளிலும் மூல இனத்தவராக, முதல் இனத்தவராக, தாய் இனத்தவராக வாழுகின்றனர். ஆனால், இளமுறியாக் - கண்டத்தின் சிதைந்த பகுதிகளில் அந்தமான், இலட்சத் தீவுகள், இலங்கை, சாவா, சுமத்திரா, பார்மோசா, பிலிப்பைன்சு, … முதலிய பல தீவுகளும் இன்றைய தென்னிந்தியாவும் குறிப்பிடத் தக்க அளவு தமிழினத்தவர் மிகுதியாக உள்ள இடங்கள் ஆகும். இந்தத் தென்னிந்தியப் பகுதித் தமிழர்களே; இன்றுள்ள இந்தியர்கள். வெளிநாடுகளிலிருந்து வந்த அன்னியர்களின் கலப்பால் உருவானவர்களைத் தவிர ஏறத்தாழ எல்லா இந்தியர்களும்,

பழங்குடியினர்களும், மலைவாசிகளும் தமிழினத்தின் எல்லாப் பண்புகளையும், நாகரிகக் கூறுகளையும், தோற்றப் பொலிவுகளையும் பெற்றுள்ளார்கள். மேலும், **இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளுமே திராவிட மொழிகளே! அதாவது, தமிழ் மொழியிலிருந்து தோன்றியவைதான் இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளும்**. எனவேதான், இந்தியர்களின் மூலமும் தாயகமும் தமிழ் நாடுதான்; இந்தியாவின் மதமான இந்துமதத்தின் பிறப்பிடமும், இருப்பிடமும், இன்றுவரை வளர்ப்பிடமும், காப்பிடமும் தமிழகம்தான் என்ற இயற்கை நிலையே தெளிவாக இருக்கின்றது. ... இப்படித் தமிழர்கள் பற்றிய ஒருசில பேருண்மைகளையாவது ஒவ்வொரு கட்டுரையிலும், நூலிலும், உரைகளிலும், ... வழங்குவதன் மூலம்தான் தமிழினத்தார்க்கு இன மான உணர்வு, இனப் பற்றுணர்வு, இன ஒற்றுமை யுணர்வு, இன ஒருமைப் பாட்டுணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, மொழியுரிமை உணர்வு, மொழிப் பற்றுணர்வு, மொழி விடுதலை பேணும் உணர்வு, ... முதலியவை முளைத்துக் கிளைத்துத் தழைத்துச் செழித்து வளர்ந்து கொழுத்த பயனை நல்கிடும், நல்கிடும், நல்கிடும்.

4)தமிழர்களின் மறுமலர்ச்சிக்காக, வளவளர்ச்சிக்காக இன உணர்ச்சியை விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும் அடையச் செய்தல் வேண்டும். ஆனால், அதற்காக மாற்று இனத்தாரைச் செர்மானியச் சர்வாதிகாரி இட்லர் யூத இனத்தவரை அழிக்க முயன்றது போல் தமிழகத்தில் உள்ள பிற இனத்தாரை அழிக்க முயன்றால், அம் முயற்சி எதில் போய் முடியும் என்றே கூற முடியாது. தமிழர்களிலேயே பாதிக்கு மேல் பிற இனத்தவரின் அடிமைகளாக, தொண்டர்களாக, பத்தர்களாக, விருப்பாளர்களாக, நம்பிக்கையாளர்களாக, ஆதரவாளர்களாகத்தான் இருக்கின்றார்கள். எனவே, எத்தகைய மாபெரும் படை தயாரானாலும் சரி; தமிழகத்தைப் பொறுத்த வரை, தமிழர் அல்லாத மற்ற இனத்தின் எதிர்ப்பைச் சமாளிப்பதை விட; அப்பாவித்-தனமாகவும், ஏமாளித்-தனமாகவும்... தமிழர்களிலேயே கணிசமான அளவினர் பிற இனப் பாதுகாவலர்களாக மாறி விரோதச் செயல்களையும், துரோகச் செயல்களையும் செய்திட்டால் ...

அவற்றைச் சமாளிப்பதுதான் சிரமம். எனவேதான், 'கருத்துப் புரட்சி', 'எண்ணப் புரட்சி', 'சிந்தனைப் புரட்சி', 'கலை வழியாகத் தமிழின மறுமலர்ச்சி', ... முதலிய பணிகளைச் செய்வதோடு; தமிழர்கள், பிற இனத்தாரை வென்று அடக்கித் தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் துணிந்து வாழத் தயாராகும் படி செய்தல் வேண்டும். இத்துடன், எல்லா இனத்தவரையும், இனக் கலப்பால் தமிழராக்க வேண்டும். அத்துடன், பிற மதத்துக்குச் சென்றவர்கள்; தங்களை, அம் மதத்துக்குரிய அன்னிய இனத்தவராகவே எண்ணிடும் நிலைகளையும் மாற்றி அமைக்கக் கருத்துப் புரட்சியைச் செய்தல் வேண்டும்.

5) தமிழர்களுடைய மதம்தான் இந்து மதம். அதுவும், '**இந்து மதம்** என்பது தமிழரின் அகப் பண்பாட்டையும், புற நாகரிகத்தையும் உள்ளீடாகக் கொண்டு உருவான ஒன்றுதான்' என்ற கருத்தினை வேற்று மதங்களுக்கு மாறிய தமிழர்களுக்கு அறிவித்தே ஆக வேண்டும்; நன்கு புரிவித்தே ஆக வேண்டும். இதில் கிடைக்கும் வெற்றியின் அளவைப் பொறுத்ததுதான் தமிழின மறுமலர்ச்சிப் பணி; தமிழ்மொழியின் விடுதலைப் பணி; தமிழின விடுதலைப் பணி அல்லது உரிமை மீட்சிப் பணி ... முதலியவைகளின் வெற்றியின் அளவு அமைந்திடும்! அமைந்திடும்! அமைந்திடும்! எனவே, தமிழர்களுக்கிடையில் மதப் போராட்டங்களோ! சாதிச் சண்டைகளோ! இல்லாமல் மொழிப்பற்றும் இனப்பற்றும் வளர்க்கப் பட்டாக வேண்டும்! வளர்க்கப் பட்டாக வேண்டும்!! வளர்க்கப் பட்டாக வேண்டும்!!!... அதுவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கும், இதன் கீழுள்ள அருட்பணி விரிவாக்கத் திட்டம் உள்ளிட்ட நாற்பத்தெட்டு நிறுவன நிர்வாகங்களுக்கும் உயிர் மூச்சாகவும், செயல்திட்டச் சித்தாந்தமாகவும் இருந்திடல் வேண்டும். அப்பொழுதுதான், தமிழர்க்கு மட்டும் தாழ்ச்சி நிலை தொடர்ந்திடும் இழிநிலையும், பழிநிலையும் அழித்தொழிக்கப் பட்டிடும்.

6) அருளுலகத்தின் விதை முதலாக உருவாக்கப் பட்ட தமிழர்களுக்கு மட்டும் தாழ்ச்சி நிலை தொடர்ந்து இருப்பதற்குக் காரணம்; அவர்களுக்கு இன உணர்வும், மொழி உணர்வும்,

தன்மான உணர்வும், தன்னம்பிக்கை உணர்வும் நலிந்து மெலிந்து வலுவிழந்து நோயுற்ற நிலையில் இருப்பதுதான். எனவே, யார் தமிழரின் மறுமலர்ச்சிக்காக அல்லது வளவளர்ச்சிக்காகப் பாடுபட முன்வந்தாலும் சரி; அவர்கள் முதலில் தமிழரின் நோய்நிலைகளையும், நலிவுமெலிவு நிலைகளையும், தேக்க வீக்க முடக்க அடக்க நிலைகளையும், ... நன்கு ஆராய்ந்து அறிந்து புரிந்து தெளிந்திடல் வேண்டும். அப்பொழுதுதான், என்னென்ன வழிகளில் தமிழர்களுக்கு அகவொளியும், வலிவும், தெளிவும், நம்பிக்கையும், விழிச்சியும், எழிச்சியும், செழிச்சியும், ... ஏற்படுமாறு செய்ய வேண்டுமென்று கூட்டுச் சிந்தனைகளால் நல்ல பல செயல்திட்டங்களை உருவாக்க முடியும். அப்படிப் புதிய சிந்தனைகளும், செயல்திட்டங்களும் பிறந்தால்தான் இளைய-தலைமுறையினராவது சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் துறைகள் அனைத்தையும் தமிழர்க்கே உரியதாக்கிட முடியும். அதனால், **தமிழர்கள் தங்களுடைய தாயகத்திலாவது தன்னம்பிக்கையுடனும், தன்மானத்துடனும், உரிமையுடனும், பெருமையுடனும், இனப்பற்றுடனும், ஒற்றுமையுடனும், கட்டுக்கோப்புடனும், மொழி உணர்வுடனும் விடுதலை வாழ்வு** வாழுகின்றவர்களாக மாறிட முடியும். இல்லாவிட்டால், அன்னிய நாடுகளிலும், பிற மாநிலங்களிலும் அடிமைப்பட்டு மானமிழந்து கூலியாய்ப் போலியாய் வாழும் தமிழர்களைப் போலவே தாய்நாட்டில் வாழும் தமிழர்களும் மானமிழந்து, உரிமையிழந்து, அடிமைப்பட்டுக் கங்காணியாய், கூலியாய், எடுபிடியாய்ப் போலி-வாழ்க்கையே வாழ நேரிட்டிடும். இவற்றை எல்லாம் பெரும்பாலும் நன்கு புரிந்த தமிழர்களே தலைவர்களாக உலாவரும் பொற்காலமும் இக்காலம்தான். ஆனால், இந்தத் தலைவர்களும் பதவியாசை, பண ஆசை, புகழ் ஆசை, சுயநல வெறி, ... முதலியவைகளால் அன்னியர்களின் கையாட்களாகவும், கங்காணிகளாகவும் மாறித் தமிழர்களை மேலும் மேலும் அடிமைகளாக்கி வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுறுமாறுதான் செய்கிறார்கள்.

எனவே, தமிழ் நாட்டுத் தலைவர்களைப் பற்றிய முறையான ஆராய்ச்சி தேவை!

7) **தமிழ் நாட்டுத் தலைவர்களைப் பற்றிய ஆராய்ச்சியால் தேவையில்லாத தனி மனித விமரிசனங்களும், பகைகளும், போராட்டங்களும், குழப்பங்களும், தமிழ்நாட்டில் வளர்ந்து விடக் கூடாது!; வளர்க்கப்பட்டு விடவும் கூடாது!!** அதாவது, தலைவர்களைப் பற்றிய ஆராய்ச்சியால், புதிய தலைவர்கள் உருவாவதற்கு வழி செய்ய வேண்டும்! அல்லது புதிய தலைவர்களை உருவாக்கும் வல்லவர்களையும், சூழல்களையுமாவது உருவாக்க வேண்டும்!! அல்லது, பொது மக்கள் போலித் தலைவர்களை நம்பி ஏமாறுவதாவது தடுக்கப் பட்டிடல் வேண்டும். எனவே, தமிழினத் தாழ்ச்சி நிலை தொடராமல் தடுக்கப்படல் வேண்டும்; விரைவில் இந்நிலை முழுமையாக அகற்றப் பட்டிடல் வேண்டும். இதற்குத் தாயகத்தின் பாரம்பரியத் தத்துவங்களின் வாரிசுகள் தலைவர்களாகிடல் வேண்டும்; தமிழினச் சித்தாந்தத்தைச் செயலாக்கும் புதிய இயக்கம் தேவை! கழகம் தேவை! கட்சி தேவை! எனவே, இவற்றை அடிப்படையாகக் கொண்டு புதிய சிந்தனைகளையும், செயல் திட்டங்களையும் உருவாக்குவோமாக!

வெற்றி நமதே!

வெல்க தமிழினம்!

வளப் படுத்துவோம் தமிழை!

ஆட்சி மீட்சி பெறச் செய்வோம் தமிழினத்தை!

**தமிழின மொழி மத விடுதலை இயக்கச் சிங்கங்கள்**

**தமிழ்நாடு**
**12.12.1987**

**//உண்மை நகல்//**

**//இந்தக் கட்டுரையின் மூலநகல் சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

# “தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள்”

## ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரூர்

நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைக் கட்டிக் காக்கும் உள்ளமைப்பாக தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் இருக்கும். ஏனென்றால், பெரும்பாலான தமிழர்கள் **‘இந்து’** என்ற சொல்லையே வெறுக்கின்றார்கள். எனவே, நமக்கு தமிழ் நாட்டு இளைஞர்களோடும், அலுவலகம் செல்பவர்களோடும், அரசியல் வாதிகளோடும் கலந்து செயல்பட இந்த இயக்கம்தான் பயன்படும். எனவே, இந்த இயக்கத்தின் கொள்கை விளக்கமான நான்கு பக்க அறிவிக்கைகளை பலருக்கும் காண்பித்து பலரையும் சந்தாதாரர் ஆக்குங்கள்.

நாம் மொழி உணர்ச்சிக்காக, மொழி உரிமைக்காக, மொழிவழிச் சிந்தனைக்காக, மொழி வளர்ச்சிக்காக செய்ய வேண்டிய திட்டம் எல்லாம் பொது மேடைகளில் பேச முடியும். சமசுக்கிருத மொழி வளர்ச்சிக்காக அடையாறு நூலகங்கள் **(Theosophical Society, Adyar)** போன்று பல இருக்கின்றன. அதுபோல், தமிழ்மொழி வளர்ச்சிக்காக ஒரேயொரு “அடையாறு நூலக”த்தையாவது உருவாக்க வேண்டும். அடுத்து தமிழ் இலக்கியப் பெருமை, உரிமை, இலக்கியச் சிறப்பு பரப்புதல், புதிய இலக்கியங்களைத் தோற்றுவித்தல், பழைய இலக்கியங்களுக்குச் செல்வாக்கு வளர்த்தல்... ... என்னும் பணிகளையெல்லாம் பொது மேடைகளில் நாம் பேசிடலாம். தமிழ்ச் சங்கம், தமிழ் நாடக மன்றம், தமிழ்க் கவிதையரங்கம், தமிழ் பேச்சுப் போட்டி, தமிழ் கட்டுரைப் போட்டி, தமிழ் இன்னிசைப் பாட்டுச் சங்கம் (தமிழிசைச் சபா) ... முதலிய அமைப்புக்களைத் தமிழனால் தமிழனுக்காக ஏற்படுத்தப் பட்டு தமிழர்களே பங்கு பெற்று தமிழர்களுக்குப் பயனளிக்குமாறு செய்திட வேண்டும்.

தமிழின வரலாறு, நாகரீகம், பண்பாடு.... முதலியவைகள் எல்லாம் பொதுமேடைகளில் எல்லாம் பேசிடலாம். தமிழின ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் பற்றி மேடைகளில் பேசிடலாம். தேவகுமாரரான ஏசு இசுரவேலர்களின் விடுதலைக்காகத்-தான் பாடுபட்டார். விவிலிய நூல்

(The Bible) உருவாக வழி செய்தார். ஆனுல், அது உலக மானுடநலத்திற்குப் பயன்படுகின்றது. அவரும் மானுடர்களால் வழிபடப் படுகின்ருர். அவருடைய கொள்கை ஒரு மாபெரும் மதமாகவே மாறி விட்டது. ஆனுல், இசுரவேலர்கள் (The People of Israel) அருளுலகத்தின் மூலவர்கள் என்ருே, காவலர்கள் என்ருே கருதப் படுவதில்லை. எத்தகைய மறை வாக்கும் இல்லை, அருள் வாக்கும் இல்லை. இதேபோல், முகம்மது நபி அவர்கள் தம்முடைய அராபிய இனத்து மக்களின் அறியாமையைச் சீர்திருத்தத்தான் தேவதூதர்கள் அறிவுரையைப் பெற்று அதன்படி செயல்பட்டார். அவருடைய வேத நூலான 'திருக்குரான்' தோன்றுவதற்கும் காரணமா யிருந்தார். ஆனுல், அவர் பல்வேறு வகையான உலக இன மக்களுக்கு கடவுளாகவே ஆகிவிட்டார். அவர் அராபியர்களுக்கு வழங்கிய மதச் சீர்திருத்தக் கருத்துக்கள் உலக முழுவதும் பரவியுள்ள ஒரு மதமாகவே ஆகிவிட்டது. அவர் தம்முடைய அராபிய இன மக்களுக்குக் கூறிய சடங்குகளும், சாத்திறங்களும் உலகிலுள்ள எல்லா இன மக்களுக்கும் கடைப்பிடிக்கக் கூடிய ஒன்ருகி விட்டது. அதாவது, முகம்மதிய இசுலாம் இனத்தைச் சார்ந்தவர்கள் {உலக முழுதும் இருக்கின்ருர்கள்}. ஆனுல், எந்த ஒரு இடத்திலும் அராபியர்கள்தான் அருளுலகத்தின் மூலவர்கள், காவலர்கள் என்று அருள்வாக்கோ, மறைவாக்கோ இல்லை.... ...

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது இம்மண்ணுலகின் முதல் மதம், மூத்த மதம், தாய் மதம் பதினெண்சித்தர்களின் அண்டபேரண்டம் ஆளும் 'சித்தர் நெறி'யான 'சீவ நெறி'யான மெய்யான இந்துமதத்தில் 1359 நூல்களும் தமிழர்கள்தான் அதாவது தமிழினத்தவர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், வித்துக்கள், விதைப் பண்ணைகள், நாற்றங்கால்கள், நாற்றுப் பண்ணைகள், ... ... என்று மிகத் தெளிவாகக் கூறுகின்றன. இன்னும் சொல்லப் போனுல் பதினெண் சித்தர்களின் 'வாக்குகள்', 'வாக்கியங்கள்', 'வாசகங்கள்', 'பாரம்பரியங்கள்', 'மறைகள்', 'முறைகள்', 'நெறிகள்', 'வேதங்கள்', 'நாதங்கள்', 'சித்தங்கள்', 'போதங்கள்', 'ஓதங்கள்', 'அத்திறங்கள்', 'சாத்திறங்கள்', 'சூத்திறங்கள்',

'தோத்திறங்கள்', 'நேத்திறங்கள்', 'வேத்திறங்கள்' ... எனப்படும் அனைத்திலுமே மிகமிகத் தெளிவாகவும், நேரடியாகவும் இந்த உலகின் முதல் நிலமான இளமுறியாக் கண்டத்து மக்களான தமிழர்களால்தான் மேலுள்ள ஏழு உலகங்களுக்கும், கீழ் உள்ள ஏழு உலகங்களுக்கும் தொடர்புகளை உண்டாக்கி அருட் பயிரின உயிரினங்களை வாழையடி வாழையாக வளர்க்க முடியும் என்று கூறுகின்றனர்கள். இவ்வளவு தெளிவாகக் கூறியிருந்தும் தமிழர்களுக்குத் தன்னம்பிக்கை இல்லை, இன நம்பிக்கை இல்லை, இன ஒற்றுமை உணர்வு இல்லை, இனப்பற்று மிகு பாச உணர்வுகள் இல்லை, இன தனித்தன்மை காக்கும் விடுதலை உணர்வு இல்லை. இவற்றால், தன்மான உணர்வும் இல்லை. அதனால், தங்களுடைய 'தாய்மொழியான தமிழ்மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழி' என்ற பேருண்மை தெரிந்திருந்தும் அதனிடம் பற்றோ, பாசமோ, பெருமையோ, உரிமையோ, ஈடுபாடோ காட்டத் தெரியாத அப்பாவிகளாக இருக்கின்றனர்கள். இந்த நிலைகளுக் கெல்லாம் காரணம் இவர்கள் தங்களுடைய மெய்யான இந்துமத வரலாறுகளையும், இலக்கியங்களையும் வாழ்வியல் நடைமுறைகளையும் தேவையான அளவு கூடத் தெரிந்து புரிந்து கொள்ளாததுதான். எனவே, இம்மண்ணுலகத்தின் அருளுலக **மூலவர்களாகவும்**, காவலர்களாகவும் உரிமை பெற்றுள்ள நமது தமிழக மக்களை நாம்தான் தேவையான ஏட்டறிவாலும் பட்டறிவாலும் தயாரிக்க வேண்டும். அதற்குரிய அனைத்து வகையான செய்திகளையும் கருத்துக்களையும் இந்தத் தமிழின மொழி மத மேடைகளில் வழங்கலாம்.

**குறிப்பு:-** இன்றைய நிலையில் நாம் தமிழ்நாட்டு விடுதலையை கேட்கவில்லை. ஆனால், நாம் பிரிவினை வாதிகள் அல்ல. நாம் முழுக்க முழுக்க தத்துவ வாதிகளே! சித்தாந்த வாதிகளே! நாம் தமிழின மொழி மத விடுதலை இயக்கம் எனப் பெயர் கொடுத்திருக்கின்றோம். இதற்குக் காரணம்:-

(a) நாம் நமது மதம் என்ன? அல்லது எது என்று தெரியாமல் இருக்கின்றோம்.

(b) நமது மதம் சிதைக்கப் பட்டுக் கிடக்கின்றது. சிறைப் பட்டுக் கிடக்கின்றது, அடிமையாக்கப் பட்டுக் கிடக்கின்றது, அடையாளம் கண்டு கொள்ள முடியாத நிலேக்கு ஆளாக்கப் பட்டுக் கிடக்கின்றது. நமது மதம் நமக்குப் பயன்படாமல் கிடக்கின்றது.

(c) நமக்கு நம்முடைய மதத்தைப் பயன்படுத்தத் தெரியாமல் இருக்கின்றது.

(d) நமது மதத்தில்தான் மனிதன் கடவுளாகும் வழிவகைகள் இருக்கின்றன.

(e) நமது மதத்தில்தான் மனிதப் பிறவி புனிதப் பிறவியாக நினேத்துப் போற்றப் படுகின்றது.

(f) நமது மதத்தில்தான் பெண்களுக்கு எல்லா வகை மதிப்பும் மரியாதையும் தரப்பட்டு தெய்வமாகவே போற்றப் படுகின்ருர்கள்.

(g) நமது மதத்தில்தான் எல்லா வகையான பயிரினங்களும், உயிரினங்களும் கடவுளாக்கப் பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன.

(h) நமது மதத்தில்தான் அனைத்து வகையான சாபங்களுக்கும், பாவங்களுக்கும், தவறுகளுக்கும், தீய செயல்களுக்கும் பரிகாரங்கள் இருக்கின்றன.

(i) நமது மதத்தில்தான் விரும்பியவர்கள், விரும்பிய கடவுள்களே, விரும்பிய விதத்தில், விரும்பிய வண்ணம், விரும்பிய போது மட்டும் வழிபட்டுப் பூசைகளேச் செய்து கொள்ளலாம் என்ற தனிமனித விடுதலே இருக்கின்றது.

(j) நமது மதத்தில்தான் இம் மண்ணுலகிலுள்ள அனைத்து மதங்களேயும், மதத் தலேவர்களேயும், மத வழிபாட்டு நிலேயங்களேயும், மத நூல்களேயும் இழிக்காமல், பழிக்காமல், எதிர்க்காமல், அழிக்க முற்படாமல் ஏற்றுப் போற்றும் பண்பாடும், தத்துவமும், சித்தாந்தமும் இருக்கின்றது.

(k) நமது மதத்தில்தான் பத்தர்கள் அல்லது பத்தியாளர்கள் கடவுளேத் தன்னுடைய தாயாக, தந்தையாக, காதலனுக, காதலியாக, சேவகனுக, சேவகியாக, தோழனுக, தோழியாக, அடிமையாக, ... முதலிய எல்லா நிலேகளிலும்

நினைத்து வழிபட்டிடும் உரிமை இருக்கின்றது. இந்த அரிய பெரிய பேருண்மைகளை எல்லாம் நாம் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் தோற்றுவித்திருக்கும் தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பொதுமேடைகளிலும், வெளியீடுகளிலும் மிகச் சிறப்பாக எடுத்து விளக்கிடலாம். அதனால், நமக்கு மக்கள் தொடர்பும், புது வேகமும், புதுப் பொலிவும், புது வலிவும் விரைவில் கிடைக்கும். நாம் விரைவில், நாடாளும் ஓர் இயக்கமாக அப்பொழுதுதான் ஆகிட முடியும். இப்பொழுது இ.ம.இ. என்றால் அது ஒரு 'மதவாத இயக்கம்' என்று வெறுப்பவர்களும், எதிர்ப்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் என்று முக்கூட்டு இயக்க அமைப்பு நமக்கு ஒரு முக்கோண அருட்சத்தி பீடமாக விளங்கட்டும். எனவே, இந்தப் புதிய நிறுவன நிர்வாகத்தை நீங்கள் எல்லாம் பெரிதும் விரும்பி எங்கும் எல்லோரிடத்தும் பரப்பிட வளர்த்திட முற்படுங்கள். இந்தப் புதிய முக்கோண அமைப்பு நெடிய பெரிய முயற்சிகளின் அநுபவத்தால் ஆழ்ந்து சிந்தித்து உருவாக்கப் பட்டதாகும். இது ஒரு வலிமையான சத்தி மிக்க சாதனமாகும். (This is a powerful and energetic machinery for us.) அன்பு கூர்ந்து எல்லா வகைப் பணியாளர்களையும் இதில் சேர்த்திடுங்கள். சாதி வெறியோ, இன வெறியோ நமக்கு இல்லை. தெய்வீக இனத்தின் முழுமையான பயன் இம்மண்ணுலகம் முழுவதும் கிடைக்க வேண்டும். (The purpose and use of the Divine Race namely the Tamils must be utilized to enrich and uplift or promote the whole universe. That is the motto of the racial policy and principle of the Pathinensiddhars. Because of this, the Pathinensiddhars are to be considered as the fanatics of their own Tamil Race). அதாவது, தெய்வத் தமிழினத்தின் பயனும், முக்கிய நோக்கமும் இந்த மண்ணுலகத்திலுள்ள அனைத்துச் சமுதாயங்களையும் உயர்த்தவும், வளப்படுத்தவும் என்பதனை

உணர்ந்தால் பதினெண் சித்தர்கள் தமிழினத்தின் மீது கொண்டுள்ள பற்றும் வெறியும் தவறல்ல. அதே நேரத்தில், பதினெண் சித்தர்கள் தங்களுடைய சொந்த இனமான தமிழினத்திற்கு மட்டும் செயல்படக் கூடிய குறுகிய **இனவெறியர்கள்** அல்ல என்பதையும் விளக்கிட வேண்டும். இங்குப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதி யாற்றங்கரைக் கருவூரார் குருபாரம்பரிய வாசகத்தை மட்டும் குறிப்பிட விழைகின்றோம்.

"இம்மண்ணுலகின் அருளுலக மூலவர்களாகவும் காவலர்களாகவும் இருக்கின்ற செந்தமிழர்கள் தங்களுடைய சொந்த இனத்தின் அருமை, பெருமை, உரிமை, அரிய தெய்வீகத் தன்மை... ... முதலியவைகள் எல்லாம் தெரியாமல் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள் என்ற ஆதங்கத்தால் இவர்களின் இன விடுதலைக்காகத்தான் யாம், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தையும் அவற்றின் கீழ் நாற்பத்தெட்டு வகையான நிறுவன நிர்வாகங்களையும் உருவாக்குகின்றோம். ஏனென்றால், இந்தத் தமிழின விடுதலைதான் உலக இனங்களின் விடுதலையையும், உலக மதங்களின் விடுதலையையும், உலக மொழிகளின் விடுதலையையும், உலக மானுடப் பண்பாட்டின் விடுதலையையும் உருவாக்கித் தரும். ஏனென்றால், மானுடர்க்குள் எதன் பெயராலும், எவரையும், எதனையும் அடிமைப் படுத்தக் கூடாது, அறியாமையில் உழலச் செய்யக் கூடாது, சுரண்டக் கூடாது, ஏமாற்றக் கூடாது என்பதுதான் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத் தத்துவமும் சித்தாந்தமும் ஆகும். அதைச் செயல் ஆக்குவதற்காகத் தான் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு இயக்கம்', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் இயக்கம்' ... என்று இந்து மறுமலர்ச்சி இயக்கம் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டு செயல்பட வேண்டுமென்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக யாம் குருவாணையிட்டே இக்

குருபாரம்பரிய வாசகத்தை எழுதுகின்ளும்" என்று குறிப்பிடுகின்ருர்.

இனிமேலாவது நம்மவர்கள் 'நமது கட்சி', 'நமது இயக்கம்' ... என்று தனித்துப் பிரித்துப் பார்க்காமல் எல்லாக் கட்சிக் காரர்களையும், எல்லா இயக்கத்தவர்களையும் நம்முடையவர்கள் என்று நினைத்து இணைத்து ஒற்றுமையோடும் ஒருமைப் பாட்டோடும் செயல்படக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, நம் காலத்திலாவது தமிழர்கள் அனைவரும் ஒற்றுமைப் படுத்தப் பட்டே ஆக வேண்டும்.

குறிப்பாக மதத்தின் பெயராலோ, சாதியின் பெயராலோ, அரசியல் கட்சிகளின் பெயராலோதான் இன்றைக்கு தமிழர்களிடையில் பெரிய சிறிய பிரிவுகளும் போட்டா-போட்டிகளும், போட்டி பொருமைகளும், சண்டை சச்சரவுகளும், மற்ற வெறிச்-செயல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை யெல்லாம் முறியடிக்க வேண்டுமென்ருல் அதாவது இவற்றை யெல்லாம் அகற்றித் தமிழர்களுக்கெல்லாம் தமிழ்மொழி உணர்வும், தமிழின உணர்வும், தமிழ் மத உணர்வும் ஏற்பட்டு தமிழர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப் பாட்டுடனும் செயல்படக் கூடிய பொற்காலம் உருவாக வேண்டு-மென்ருல்; அந்த நற்காலத்தை உருவாக்குகின்ற ஆற்றல் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் என்ற முப்பெரும் இயக்கங்களின் முக்கூட்டு அமைப்பால்தான் முடியும். எனவே, நம்மவர்கள் ஒவ்வொருவரும் இவற்றின் கொள்கை விளக்க அறிவிப்புகளை குறிப்பாக படித்த, படிக்கின்ற இளைஞர்களிடையே வழங்கி அவர்களையெல்லாம் இந்த இயக்கங்களின் உறுப்பினராக்குங்கள். அப்போதுதான், நமது இந்து மறுமலர்ச்சி இயக்கம் இன்றைக்கு வெளிப்படையாக இந்தியாவில் தெரிகின்ற பிருமணர்களின் சமசுக்கிருத மொழிக்குரிய வேதமதம் கலந்த 'ஹிந்துமதம்' அல்ல; அதாவது, ஹிந்து மதத்திற்காக அல்ல என்ற பேருண்மை புரியும். நாம் 'மெய்யான இந்துமதமும்


பொய்யான ஹிந்து மதமும்' என்ற தலைப்பில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்டுள்ள பல கட்டுரைகளை வெளியிட்டும் ஏற்படாத பயன் இந்தத் தமிழின மொழி மத விடுதலை இயக்கங்கள் எனும் முக்கூட்டு இயக்கத்தின் கொள்கை விளக்கத்தால் கிடைத்திடும், கிடைத்திடும், கிடைத்திடும்.

***வளர்க தமிழ்!***
***வெல்க தமிழினம்!***
***ஆட்சி மீட்சி பெறுக தமிழர் மதம்!***
***தமிழின ஒற்றுமை ஓங்குக!***
***தமிழ்மொழி உரிமை பெறுக!***
***தமிழர் மதம் விடுதலை பெறுக!***

//உண்மை நகல்//

//மூல நகல் எழுதியது யாரென்று நகலில் குறிக்கப்படவில்லை; கையெழுத்து யாருடையது என்று கண்டுபிடிக்க முடியவில்லை.//

---



ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

# தமிழுக்கு என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்?

**நாம் ஏன் வளர முடியவில்லை?**

**I**

தமிழ் விடுதலையே தமிழின விடுதலை.

தமிழின் பெருமையே தமிழினப் பெருமை.

தமிழின் உரிமையே தமிழின உரிமை.

தமிழின் வளர்ச்சியே தமிழின வளர்ச்சி.

தமிழின் மலர்ச்சியே தமிழின மலர்ச்சி.

தமிழின் விழிச்சியே தமிழின விழிச்சி.

தமிழின் எழிச்சியே தமிழின எழிச்சி.

தமிழின் கிளர்ச்சியே தமிழின கிளர்ச்சி.

தமிழ்மொழிப் போரே தமிழினப் போர்.

தமிழ்மொழிச் செழிச்சியே தமிழினச் செழிச்சி.

தமிழ்மொழியின் உயர்ச்சியே தமிழின உயர்ச்சி.

தமிழ் மொழியின் வரலாறே தமிழின வரலாறு.

தமிழ்மொழியின் பண்பாடே தமிழினப் பண்பாடு.

தமிழ்மொழியின் நாகரீகமே தமிழின நாகரீகம்.

தமிழ்மொழியின் கலையே தமிழினக் கலை.

தமிழ்மொழியின் அறிவியலே தமிழின அறிவியல்.

தமிழ்மொழியின் தொன்மையே தமிழினத் தொன்மை.

தமிழ்மொழியின் மேன்மையே தமிழின மேன்மை.

தமிழின் திண்மையே தமிழினத் திண்மை.

தமிழின் நுண்மையே தமிழின நுண்மை.

தமிழின் ஒண்மையே தமிழின ஒண்மை.

தமிழின் ஆண்மையே தமிழின ஆண்மை.

தமிழின் ஆட்சியே தமிழின ஆட்சி.

தமிழின் மீட்சியே தமிழின மீட்சி.

தமிழின் பற்றே தமிழினப் பற்று.

தமிழின் பாசமே தமிழினப் பாசம்.

தமிழின் ஒருமைப்பாடே தமிழின ஒருமைப்பாடு.

தமிழின் நம்பிக்கையே தமிழின நம்பிக்கை.

தமிழின் மானமே தமிழின மானம்.

தமிழின் வாழ்வே தமிழின வாழ்வு.

தமிழின் உய்வே தமிழின உய்வு.

தமிழ்மொழியை மதிப்பதே தமிழின விதியை நிர்ணயிக்கும்.

தமிழ்மொழி உணர்வே தமிழின உணர்வு.

தனித் தமிழ் இயக்கமே தமிழின விடுதலை இயக்கம்.

தனித் தமிழ் நாட்டமே தமிழின ஈட்டம்.

## II

தமிழ்மொழி கலைகளில் சிறந்தது. தமிழர்களும் கலைகளில் சிறந்திருக்கிறார்கள். இன்றைய விஞ்ஞானத்தில் தமிழர்கள் வளரவில்லை. எனவே, தமிழும் அறிவியல் மொழியாக வளரவில்லை. அதாவது, தமிழர்கள் அறிவியலில் தனித்த, புகழ்மிக்க, பயன்மிக்க, உயர்ந்த வளர்ச்சிகளை அடையவில்லை. அதனால், தமிழ்மொழியும் சிறந்த அறிவியல் மொழியாக வளர முடியவில்லை. எனவே, இன்றைய நிலையில் உள்ள அறிவியல்கள் அனைத்தும் தமிழ்மொழியில் மொழி பெயர்க்க வேண்டும். அப்போதுதான், தமிழ்மொழி அறிவியல்

மொழியாகிடும். அதன்பிறகு இந்த அறிவியல்மொழி ஆக்கப்பட்ட தமிழ்மொழியைக் கற்கும் தமிழர்கள் சிறந்த அறிவியல் மேதைகளாவதோடு தமிழ்மொழியும் அறிவியல் மொழியாக வளவளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றிடும். எனவே, உடனடியாகத் தமிழ்மொழி வாயிலாகத்தான் மருத்துவம், பொறியியல், பிற விஞ்ஞானங்கள் அனைத்தும் கற்றிட வேண்டும் என்று சட்டம் செய்திடல் வேண்டும். அப்போது புத்தகம் எழுதுபவர்கள், மொழி பெயர்ப்பாளர்கள் தானாகவே தோன்ற ஆரம்பித்திடுவார்கள்.

# III

# தமிழ்மொழிப் பெருமையின் போலிநிலை

தமிழ்நாட்டில் தமிழின் பெயராலே இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளும், சமுதாயக் கட்சிகளும், சமயக் கட்சிகளும், தனிப்பட்ட நிறுவனங்களும், புகழ்மிக்க தனிமனிதர்களும் ஏராளமாக இருக்கின்றார்கள். எல்லோருமே தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்று கூறுகிறார்கள். ஆனால், யாருக்குமே தமிழை வாழ வைக்கவோ அல்லது வளர்க்கவோ விருப்பம் இல்லை. அதாவது, யாரிடமுமே தமிழை வாழவைக்கும் முயற்சியும், தமிழ் வளர்க்கும் முயற்சியும் இல்லை. எல்லோருமே போலியாகத்தான் தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்று குரல் கொடுக்கிறார்கள். கூச்சல் போடுகிறார்கள். அதாவது, ஏறத்தாழ எல்லோருமே தமிழ் வாழ்க! தமிழ் வளர்க! என்ற சொற்களைத் தங்களுக்கு வேலியாகவே பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஏறத்தாழ எல்லோருடைய நெஞ்சமும் சிந்தையும் தமிழ்மொழியைப் பற்றிய ஆக்கப் பூர்வமான சிந்தனைகள் ஏதும் இல்லாமல் காலியாகவே கிடக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் பெரும்பாலான தமிழினத் தலைவர்கள் அந்நிய மொழியினரின் கைக்கூலிகளாகத்தான் இருக்கிறார்கள். அதாவது பெரும்பாலான தமிழினத் தலைவர்கள் தமிழ் மொழியைப் பொறுத்தவரை போலிகளாகவும், கூலிகளாகவும்,

கருங்காலிகளாகவும், தமிழ்மொழித் துரோகிகளாகவும், விரோதிகளாகவும்தான் வாழுகிருர்கள். எனவே, தமிழ்மொழிக்கு அந்நிய மொழியினர்களால் வருகின்ற இழிவையும் அழிவையும் விட; தமிழர்களிலே உள்ள தமிழ் மொழித் துரோகிகளாலும் விரோதிகளாலும் வருகின்ற இழிவுகளும், அழிவுகளும்தான் அதிகம், அதிகம், அதிகம். எனவே, தமிழர்களுக்கிடையே இருக்கக் கூடிய தமிழ்மொழிப் பற்றில்லாத தமிழ்மொழித் துரோகிகளேயும் விரோதிகளேயும் சீர்திருத்தும் பணி அல்லது ஒரு முடிவுக்குக் கொண்டு வரும்பணி உடனடியாகத் துவக்கப் பட்டேயாக வேண்டும். இதைத் தவிர தமிழ்மொழியின் வாழ்வு நிலைகளேயும், வளர்ச்சி நிலைகளேயும் பற்றி வழங்கப்படும் தவருன செய்திகளுக்கு உடனடியாக, நேரடியான, முழுமையான மறுப்பு தெரிவிக்கப் பட்டேயாக வேண்டும். அதுதான் தமிழை வளர்க்கும்; வாழ வைக்கும்; ஆட்சிமீட்சி பெறச் செய்யும்.

# IV

# தமிழ்மொழி பற்றிய தவருன செய்தி

“தமிழ்மொழிதான் உலகிலேயே முதல்மொழி, மூத்தமொழி. தமிழ்மொழியில்தான் மூன்று சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்தன. தமிழில்தான் உலகிலேயே தொன்மையான சங்க இலக்கியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இருக்கின்றன. தமிழிலுள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலே பற்றிய செய்திகள் உலகம் முழுவதும் தெரியும். உலக மக்களால் திருக்குறள் பைபிளுக்கும், குரானுக்கும் சமமாக மதிக்கப்படுகிறது, போற்றப்படுகிறது. இளமுறியாக் கண்டத்திலிருந்து தமிழர்களின் பண்பாடும், நாகரீகமும்தான் இம்மண்ணுலகப் பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும் மூலம் என்ற கருத்துக்கள் உலக ஆராய்ச்சியாளர்களால், அறிவியல் மேதைகளால் ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டன....” என்பன போன்ற இந்தச் செய்திகள் முழுக்க முழுக்கத் தவருனவை, ஏமாற்றுனவை,

பொய்யானவை, போலியானவை, பித்தலாட்டமானவை.

ஏனென்றால், Encyclopaedia Britannica, அதாவது உலகம் முழுவதும் ஒத்துக் கொள்ளப்பட்ட பிரிட்டன் நாட்டுக் கலைக்களஞ்சியத்தில் மேலே குறிப்பிட்டிருந்த செய்திகளின் எந்தச் செய்தியும் இடம்பெற வில்லை, இடம்பெற வில்லை, இடம்பெற வில்லை. தமிழ் நாட்டு அரசாங்கமோ, கட்சிகளோ, தனிப்பட்ட தலைவர்களோ இதற்காக வருந்தவுமில்லை. அதற்குரிய முயற்சிகளில் ஈடுபடவும் இல்லை.

**குறிப்பு**:- கோடிக்கணக்கில் பணத்தைச் செலவு செய்து உலகத் தமிழ் மாநாடுகள் நடத்துகிறோம். இதில் ஒரு சிறு பகுதியை செலவிட்டால் போதும். பிரிட்டன் நாட்டுக் கலைக் களஞ்சியத்தினரை தமிழகத்துக்கு வரவழைத்து மேலே கூறிய செய்திகள் அனைத்தையும் நேரில் விளக்கமாக்கி அக் கலைக் களஞ்சியத்தில் வெளியிடுமாறு செய்யலாம். அல்லது அந்தக் கலைக்களஞ்சியத்திற்கு ஈடாக தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழ் வரலாறு, தமிழ்நாடு பற்றிய செய்திகள்; தமிழர் சமயம், சமுதாயம், தனிமனித வாழ்வு பற்றிய செய்திகள் முதலிய அனைத்தையும் விரிவாக விளக்கி ஆங்கிலம், பிரெஞ்சு, செர்மனி, இரசியம், சீனம், உருது முதலிய மொழிகளில் கலைக் களஞ்சியத்தை அழகிய பல தொகுதிகளாக வெளியிடலாம். இவை அனைத்திற்கும் ஆகக்கூடிய செலவு ஓர் உலகத் தமிழ் மாநாட்டிற்கு ஆகும் செலவில் பாதிக்கு மேல் ஆகாது, ஆகாது, ஆகாது, ஆகவே ஆகாது.

**சிறப்புக் குறிப்பு**:- இப்பேருண்மை ஆயிரமாயிரம் முறை எழுதப் பட்டும், மேடைகளில் பேசப் பட்டும் தமிழ்நாட்டு அரசாங்கமோ, தமிழினத் தலைவர்களோ உணர மறுக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன? தொடர்ந்து இந்தியாவின் விடுதலைக்கு முன்னும் பின்னும் தமிழர்களை அந்நியர்களும், அந்நிய மொழிகளும் நேரடியாகவும், கங்காணிகள் மூலமாகவும், கைக்கூலிகள் மூலமாகவும், கருங்காலிகள் மூலமாகவும், அப்பாவிகள் மூலமாகவும்,

ஏமாளிகள் மூலமாகவும், துரோகிகள் மூலமாகவும் அடக்கியாண்டு வருவதுதான், அடக்கியாண்டு வருவதுதான், அடக்கியாண்டு வருவதுதான். இதைப் பச்சையாகவும், கொச்சையாகவும் கூற வேண்டு மென்றால் தமிழினத்துக்குத் தமிழனே தலைவனாக, குருவாக, குருபீடமாக, ஆச்சாரியாராக, ஆசிரியராக, கலைஞனாகப் பணிபுரியும் பொற்காலம் உருவாகவேண்டும், உருவாக வேண்டும், உருவாக வேண்டும். இல்லையெனில் தமிழன் ஏமாற்றப் படுவது தொடர்கதையாகிடும். உலகெங்கும் தமிழன் எடுபிடியாகவும், கூலிக்காரனாகவும், மானங் கெட்ட ஈனப் பிறவிகளாகவும் வாழ நேரிடும். எனவே, தமிழ்மொழியைப் புரிந்த தமிழ்மொழித் தலைவன், தமிழினப் பற்றுடைய மெய்யான தமிழினத் தலைவன், தமிழ்ச் சமுதாயத்தின் தத்துவத்தின் வாரிசாகத் தோன்றிய தத்துவ நாயகத் தலைவன் தமிழ்நாட்டிற்கும் தமிழர்களின் உள்ளங்களுக்கும் தேவை, தேவை, தேவை.

# V
# தமிழ்மொழியே தமிழின விடுதலைப் போரின் ஆயுதம்

"தமிழ்மொழியே தமிழர்களை தன்னம்பிக்கையும், தன்மான உணர்வும், இனமான உணர்வும் பெறச் செய்யும் மருந்து."

"தமிழ்மொழியே தமிழர்களுக்கு இனப்பற்றும், இன ஒற்றுமையையும், இன ஒருமைப்பாடும் உருவாக்கித் தரக்கூடிய அரிய சாதனம்."

"தமிழ்மொழியே தமிழர்களுக்கு சமய சமுதாய அரசியல் விடுதலை உணர்வுக் கருத்துக்களை வழங்கும் தத்துவம்."

"தமிழ்மொழியே தனிமனித விழிச்சிக்கும், சமுதாய எழிச்சிக்கும், அரசியல் செழிச்சிக்கும் உதவும் முயற்சிச் சத்தியாகும்."

"தமிழ்மொழியே தமிழர்களைத் தாழ்ச்சி நிலைகளிலிருந்தும், வீழ்ச்சி நிலைகளிலிருந்தும், மீட்சி

பெறும் பயிற்சிகளை வழங்கக் கூடியது.”

“தமிழ்மொழியே இன விரோதிகளையும், துரோகிகளையும் திருத்தக் கூடிய அருட்சத்தி.”

“தமிழ்மொழியே சொத்தையுற்றும், சத்தற்றும் போன சமுதாய உணர்ச்சியை சத்தி பெற செய்யும் சத்துணவு.”

“தமிழ்மொழியே விண்ணையும், மண்ணையும் உணர்ந்து கொள்ள உதவும் அறிவியல்.”

“தமிழ்மொழியே தமிழின விடுதலைப் போருக்குரிய நிறுவனக் கட்டமைப்புக்களையும், நிருவாக ஒழுங்கமைப்புக்களையும் உருவாக்கித் தரவல்ல ஆசான்.”

“தமிழ்மொழியே அந்நியர்களின் ஊடுருவல்களையும், தலைமைகளையும், தலையீடுகளையும் முறியடிக்கும் அரிய படை.”

“தமிழ்மொழியே தமிழர்களுக் கிடையேயுள்ள அனைத்துவகை பிரிவின அமைப்புக்களையும், பிரிவினைச் சத்திகளையும் எரித்துச் சாம்பலாக்கும் பெருநெருப்பு அல்லது புரட்சி நெருப்பு.”

# VI

தமிழர்கள் மத வேறுபாடுகளையும், சாதி வேறுபாடுகளையும், கட்சி வேறுபாடுகளையும் கடந்து ஒன்றுபட்டு ஒருமைப்பட்டு ஒருமைப்பாட்டுடன் செயல்படக் கூடிய பொற்காலம், நற்காலம் உருவாக வேண்டும். அதனை உருவாக்குவது தமிழ்மொழி யுணர்ச்சி, தமிழ் இலக்கிய உணர்ச்சி, தமிழ்க் கலையுணர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டுணர்ச்சி, தமிழ் நாகரீக உணர்ச்சி, தமிழ் தத்துவ உணர்ச்சி, தமிழ்ச் சான்றோர்களைப் போற்றும் உணர்ச்சி, தமிழ் வரலாற்றுணர்வு உணர்ச்சி, ... முதலியவைகள்தான். இதற்காக அனைத்தையும் தமிழ்மொழி வழியில்தான் கற்க வேண்டும் என்ற நிலை உருவாக வேண்டும். ஏனென்றால், ஆங்கில மொழியையும், தமிழ்மொழியையும் ஓரளவு கற்றுத் தேர்ந்த தமிழர்களில் **பெரும்பாலானவர்கள்** தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும், பண்பாட்டுக்கும், நாகரீகத்திற்கும் பகைவர்களாக, விரோதிகளாக, துரோகிகளாக, எதிரிகளாக மாறிவிடுகிறார்கள், மாறி விடுகிறார்கள், மாறி

விடுகிறுர்கள் என்பதுதான் உண்மை. எனவேதான், தமிழர்களில் அந்நிய மொழியைக் கற்பவர்களின் தொகை மிகமிகக் குறைந்ததாகவும் அல்லது குறுகியதாகவுமே இருக்க வேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது. அதாவது, அந்நிய மொழியைக் கற்கும் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அந்நிய மொழிக்கும், மொழியினர்களுக்கும் நன்றியும், உண்மையுமுள்ள அடிமைகளாக மாறி விடுகிறுர்கள், மாறி விடுகிறுர்கள், மாறி விடுகிறுர்கள். எனவேதான், எத்தகைய இழப்புக்கஊயும் ஈடுகட்டி, எவ்வளவு பெரிய விஊயையும் உடனே கொடுத்து தமிழ்நாட்டிலுள்ள கல்வித் துறையை தமிழ்மொழி வழிப் பட்டதாக்க வேண்டும். எதையுமே எவருமே அந்நிய மொழியில் கற்கக் கூடாது என்று தடைச் சட்டம் போட்டாக வேண்டும். இதற்காக அந்நிய மொழியிலுள்ள அஊனத்து வகையான கஊலச் சொற்கஊயும் மொழியாக்கம் செய்தாக வேண்டும். [The Transliteration must be done and not Translation.] அப்பொழுதுதான் அந்நிய நாடுகளுக்கு மேற்படிப்பிற்காக செல்லுபவர்களுக்குப் பேருதவியாக இருக்கும். மேலும், எந்தத் தொழிற் கல்வி கற்பவர்களாஞலும் சரி, அல்லது எந்த அறிவியல் கல்வி கற்பவர்களாஞலும் சரி, தமிழ்மொழி வரலாறு, தமிழிலக்கிய வரலாறு, தமிழ் இலக்கிய அறிவு, தமிழினச் சமுதாய வரலாறு, சமய வரலாறு, அரசியல் வரலாறு முதலியவைகஊ முதலாண்டு முதல் இறுதியாண்டு வரை முதல் பாடமாகப் படிக்க வேண்டும். அதாவது, அன்றுடம் குறைந்தது இரண்டு மணி நேரமாவது தமிழ்ப் பாட வகுப்பு எல்லா மாணவர்களுக்கும் இருக்க வேண்டும். எல்லாத் தொழிற் படிப்பினரும், அறிவியல் படிப்பினரும் ஆண்டுதோறும் கட்டாயமாகத் தமிழ்ப்பாடம் படித்துத் தேர்ச்சி பெற வேண்டும். இது சட்டமாக்கப் பட்டால்தான் தமிழ் அறிவும், தமிழ் உணர்வும் பரவலாகப் படித்த மக்களிடமும் வளர்ந்திடும், வளர்ந்திடும், வளர்ந்திடும். அப்படித் தமிழுணர்வும், தமிழறிவும் கல்வித் துறையின் இரு கண்ணெனப்

பேணப் பட்டிட்டால்தான் தமிழர்களுக்குத் தன்மான உணர்வு, இனமான உணர்வு, மொழிவிடுதலை உணர்வு, இனவிடுதலை உணர்வு, பண்பாட்டு விடுதலை உணர்வு, நாகரீக விடுதலை உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, சுயமரியாதை உணர்வு, இனப் பற்றுணர்வு, இன ஒற்றுமை யுணர்வு, இன ஒருமைப் பாட்டுணர்வு முதலியவை விழிச்சி பெறும், எழிச்சி பெறும், செழிச்சி பெறும்.

## VII

தமிழின் எதிரிகளான அந்நியர்களைப் பற்றி மட்டும் சிந்திக்காமல் தமிழின் பகைவர்களான துரோகிகளையும், விரோதிகளையும் பற்றியும் சிந்தித்தாக வேண்டும். அதற்காகச் சங்கப் புலவர்களையும், நாயன்மார்களையும், ஆழ்வார்களையும், பெருங்காப்பிய புலவர்களையும், சிறுகாப்பிய புலவர்களையும் ... மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். அதாவது, நாம் நமது இலக்கியங்களையும், இலக்கியக் கலைஞர்களையும், இலக்கிய நாயகர்களையும், இலக்கியக் காவலர்களையும் பெருவாரியான பொதுமக்களின் நெஞ்சிலும், சிந்தையிலும் நிலைபேறு பெறச் செய்ய வேண்டும். அல்லது நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் தமிழர்களின் வாழ்வியலில் தமிழ் மணம் கமழும், கமழும், கமழும். இல்லையேல் தமிழர்களின் வாழ்வியலில் பிண நாற்றமே வீசும், வீசும், வீசும்.

**//உண்மை நகல்//**

*நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், துரோணாச்சாரியார் பீடம், குருவழி வாரிசு, குருவின் பதிலி, சித்தரடியார் சீ.மணி, வேம்படிதாளம்.*

www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609

# தமிழின விடுதலையே உலக ஆன்மீக விடுதலை

**[கி.பி.1772இல் எழுதப்பட்டது]**

இம்மண்ணுலகில் ஆன்மீக உணர்வு, எண்ணம், சிந்தனை, ... முதலியவை விளைந்திட அறிவியல் வித்துக்களை விதைத்தவர்கள் பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களுமே ஆவார்கள். இவற்றைப் பயிர் செய்யும் அருளுலக உழவர்களாகத் தேவர்கள், தேவபதிலிகள் (அவதாரங்கள்), தெய்வப் பிறப்புக்கள், தேவதூதர்கள், ... என்று (48) நாற்பத்தெட்டு வகை அருளாளர்கள் தொடர்ந்து வாழையடி வாழையாக இம்மண்ணுலக இறுதிக்குள் தோன்றுமாறு நியதி வகுக்கப் பட்டது.

உலகெங்கும் பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றிக் கொண்டே இருக்கும். காலப்-போக்கில் அருளாளர்களின் சாதனைகளும், போதனைகளும் தேய்வதும் ஓய்வதும் மங்குவதும் மறைந்துறைவதும், ... நேரிட்டிடும். இவற்றால், தனிமனிதர்கள் தங்களுடைய அகம்பாவம், ஆணவம், கன்மம், மாயை, பேராசை எனும் ஐந்தால் ஐம்புலன்களின் வெறிகளுக்கு இரையாகிப் பிறர் நலங்களையும் இரையாக்கிடலும், சிறையாக்கிடலும், குறையாக்கிடலும், கறையாக்கிடலும், ... நிகழ்ந்திடும். அவற்றால் பேரழிவு உலக ஆன்மீக வாழ்வுக்கு ஏற்பட்டிடும் நிலை விளைந்திடும். அப்பொழுதே பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடுவர்.

**இம்மண்ணுலகுக்கு மட்டுமின்றி; இந்த அண்ட பேரண்டங்களுக்கே அருளுலகக் கருவாக, குருவாக, தருவாக, திருவாக இருப்பவர்களே தமிழும் தமிழர்களும்**. எனவேதான், தமிழினத்தில் வாழையடி வாழையாகக் குருபரம்பரையில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றித் தமிழ்மொழியையும், தமிழர்களையும் அனைத்து வகையான மாயைகளிலிருந்தும் உலகியல் அடிமைநிலைகளிலிருந்தும் விடுவிக்கிறார்கள். அப்படித்

தமிழ்மொழியும் தமிழர்களும் விடுதலை பெற்றபிறகுதான்; உலகம் முழுவதுமுள்ள மொழிகளும், பல்வேறு இன மக்களும், அவர்களுக்குரிய அகப் பண்பாடுகளும், புறநாகரிகங்களும் விடுதலை பெற்றிடுகின்றன.

இவற்றையெல்லாம் எண்ணித்-தான் எந்தை நாமக்கல் மோகனூர் பாழ்வெளி எய்தியருளிய கைலாசபதி மகனுர் உருத்திரம் பிள்ளை நான்காவது தமிழ்ச் சங்கத்தின் தொடர்ச்சியாகவும், ஐந்தாவது தமிழ்ச் சங்கமாகவும் தோற்றுவித்த **தமிழ் வளர்ச்சிக் கழகம்** தமிழின் வள-வளர்ச்சிக்காகவும், உலக ஆன்மீக மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டது. ஏராளமான ஓலைச்சுவடிகள் படியெடுக்கப் பட்டு நாடெங்கும் உலாவந்தன; தாராளமாகப் பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும் உள்ள மக்கள் தமிழின் சுவையையும், பயனையும் அடைந்திடத் தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், மேதைகள், நாவலர்கள், பல்வேறு வகைக் கலைஞர்கள் உருவாக்கப் பட்டுச் செயல்பட்டிட்டனர். அதனுல், திரைகடலோடித் திரவியங்களைத் திரட்டிய தீரத் தமிழ்ச் செல்வர்கள்; **“தமிழினமும் மொழியும் விடுதலை பெறத் தமிழரின் ஆன்மீக உணர்வும், எண்ணமும், சிந்தனையும், அறிவும் விடுதலை பெற வேண்டும்”** என்ற குருபாரம்பரிய வாசகத்தை ஏற்று அதற்குரிய ஞானப்பள்ளியான நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபாட்டு நிலையங்களையும் மீண்டும் நிலைகுலையாத கலைக் கோயில்களாகப் புதுப்பித்தார்கள். எங்கும் கோயில்களின் திருப்பணிகள், சமய இலக்கிய விரிவுரைகள், பத்திப் பாடல்வளர் பசணை (பசு + அணைய) மடங்களின் தோற்றங்கள், மதம் வளர்க்கும் கலை நிகழ்ச்சிகள், ஏட்டறிவு எட்டாப் பட்டறிவு, மக்கள் ஆன்மீகச் செல்வம் அடைந்திட உதவும் திருவிழாக்கள், சிருஅர் முதல் பெரியவர் வரை வசதி வாய்ப்புக்களுக் கேற்பச் சாரிசாரியாகத் திருத்தலங்களைக் கண்டுவர அருட்பயணங்களை மேற்கொண்ட திருக்கூட்ட உலாக்கள் ... என்று தமிழ் கூறும்

நல்லுலகமே மறுமலர்ச்சியும் வளவளர்ச்சியும் வலிமைச் செழிச்சியும் பெற்றிட்டது.

அந்த நிலேயே செந்தமிழ் நாட்டின் சொந்த நிலேயாக என்றென்றும் இருந்திருக்குமே யாளுல் தமிழ்மொழி விடுதலே! தமிழின விடுதலே! தமிழரின் இந்துமத விடுதலே! [வட ஆரியரின் ஹிந்துமதம் வேறுபட்டது] ... முதலிய பணிகள் அனைத்தும் இனிதே நிறைவேறி இருக்கும். அதளுல், **இசுரவேலரின் எழிச்சியும், அராபியரின் எழிச்சியும், நாற்பத்தேழாவது தேவகுமாரளுலும், நாற்பத்தெட்டாவது தேவ தூதராலும் உலக ஆன்ம நேய மறுமலர்ச்சிக்கு உதவியது போல்; தமிழின எழிச்சியும், உலக ஆன்மீக விடுதலேக்கு உதவியிருக்கும். அவற்றின் பயளுக உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் இந்தக் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளே தோன்றுவதற்கு முன்னரே அமைந்திருக்கும். எமது கருத்தும், முயற்சியும், காலமும் வரப்போகும் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சிக்கு கட்டியங் கூறுவனவாகவே செலவாகி யிருக்கும்.**

அந்தோ! செந்தமிழரின் சொந்தத் தாய்நாட்டையும், இனத்தாரையும், மொழியையும், மதத்தையும், பண்பாட்டையும், நாகரிகத்தையும் மதிக்காமல், விரும்பாமல், நம்பாமல், மறந்தும் துறந்தும், மறுத்தும் வெறுத்தும், எதிர்த்தும், துரோகித்தும், அன்னியரிடம் காட்டிக் கொடுத்தும், அன்னியர்களுக்கு அடிமைப்படுத்தியும், ... செயல்படுபவர்கள் அன்றே மிகுதியானவர்களாகி விட்டார்கள். இவர்கள், கோழைப் பண்பால் இப்படிச் செய்யவில்லே. இவர்களேப் பிடித்தாட்டும் சுயநல வெறியும், பேராசை வெறியும், அகம்பாவமும், ஆணவமும், கன்மமும் அன்றே இப்படி யெல்லாம் செயல்பட இவர்களே ஊக்குவிக்கின்றன!?!?!? ...

இவற்றுக்கெல்லாம் மருந்து பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் திருத்தோற்றம்தான். ஆனால், அதற்கும் நம்மவர்களில் கணிசமானவர்கள் அன்னியர்களின் பட்டம், பதவிகளுக்காகவும், கூலிகளுக்காகவும், பரிசுகளுக்காகவும், பாராட்டுகளுக்காகவும், மானமிழந்து மாற்றாரிடம் மண்டியிட்டு அடிமைகளாகவும், எடுபிடிகளாகவும், ... வாழும் கேடு கெட்ட குடிகெடுக்கும் வாழ்க்கை முறையை விட்டொழிக்கச் செய்ய வேண்டும். நமது பண்பாடு, நாகரிகம், மொழி, இன உரிமை, மதப்பெருமை, வரலாற்று மூலங்கள் ... முதலிய அனைத்தையும் பாதுகாத்திடும் கோயில்கள் பாழடைந்து கிடந்திடுவதை மாற்றிட வேண்டும். நமது கலைக் கோயில்கள் அனைத்தும் அந்தந்த வட்டாரத்து மக்களை மொழியறிவு, இலக்கிய அறிவு, வரலாற்று அறிவு, வாழ்வியல் அறிவு, மொழிப்பற்று, இனப்பற்று, மதப்பற்று, தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, ஆன்மீக விடுதலை யுணர்வு, ... முதலியவைகளைப் பெறச் செய்யும் ஞானப்பள்ளியாக, பாடிவீடாக, பாசறையாக, கலைக் கருவூலமாகப் பயன்படுத்திடும்படிச் செய்ய வேண்டும். நமது புலவர்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும், விரிவுரையாளர்களையும், அறிஞர்களையும், ... நம்மவர்களுக்கு உரிமையுணர்வும், தமிழின விடுதலை யுணர்வும், இந்துமத விடுதலை யுணர்வும், எதற்கும் அடிமையாகாத தன்மான உணர்வும் ஊற்றெடுக்கச் செய்யுமாறு உழைப்பாணை விடுக்க வேண்டும். இவற்றிற்காகவே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவிக்கிறோம் யாம்.

## கருவூரூர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை

[9.5.88 அன்று குருதேவர் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களால் வெளியிடப் பட்டது.]

# மெய்யான இந்துமதத்தைப் புரிந்து பயனடையுங்கள்

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்**

1. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய நாட்டுக்குரிய, இனத்துக்குரிய, மொழிக்குரிய முன்னோர்களை மெய்யான பத்தியோடு வழிபட வேண்டும்.

2. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வுக்குரிய மூத்தோர்களை அன்புடன் மதித்துப் பாசத்துடன் போற்றிப் பேணிடல் வேண்டும்.

3. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும், மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் உரியவர்களில் கடவுள்நிலை பெற்றவர்களை மட்டுமே வழிபட வேண்டும். ஏனென்றால், இம்மண்ணுலகில் கடவுள்நிலை பெற்றவர்கள் எல்லா மொழியிலும், எல்லா இனத்திலும், எல்லா நாட்டிலும் இருக்கிறார்கள்.

4. கடவுள் ஒருவரே என்று கூறுவது கற்பனை. இக்கற்பனை போன்றதுதான் கடவுள் எங்கும் நிறைந்திருப்பார், எல்லா வல்லமைகளையும் பெற்றிருப்பார், எல்லா மொழிகளையும் புரிந்து கொள்வார் என்ற வாதம்.

5. மனிதர்கள் தாங்கள் ஏற்ற பயிற்சிகளாலும், நோற்ற தவங்களாலும், பெற்ற சித்திகளாலும், பிறவாமை, இறவாமை என்ற முத்தி நிலைகளைப் பெறுகின்றார்கள். அப்படி முத்தி நிலைகளைப் பெற்றவர்கள்தான் தங்களுடைய முயற்சிகளால் படிப்படியாக 48 வகையான நிலைகளையும் கடந்து உயர்ந்து கடவுளாகிறார்கள். எனவே, கடவுள் நிலை பெற்றவர்களுக்கு மொழி, இனம், நாடு, அருளாற்றல் எனப்படும் அனைத்துக்குமே குறிப்பிட்ட எல்லை உண்டு.

6. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குடும்ப தெய்வம், குலதெய்வம், ஊர்த்தேவதைகள், தேவர்கள், நாட்டுக் கடவுள்கள் எனப்படுபவர்களைத் தேவைக்கேற்ப வழிபாடு செய்துதான் பயனடைய வேண்டும்.

7. மேற்படி பதினெண் சித்தர்களின் சித்தர் நெறி எனும் சீவநெறியான மெய்யான இந்துமதப்படியே நாடெங்கும் அருட்கோட்டங்கள், யாகசாலைகள், அருட்பணி

விரிவாக்கத் திட்ட நிலையங்கள்... முதலியவை அமைத்து பொதுமக்களுடைய அனைத்து வகையான குறைகளுக்கும் பாதிப்புக்களுக்கும் பரிகாரங்கள் செய்து தரப்படுகின்றன.

தொடர்பு:-

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

**தமிழின மொழிமத விடுதலை இயக்கம்**

### 1. சித்தர் நெறிச் சித்தாந்த விளக்கமென்பது:-

'குருதேவரால் உருவாக்கப்படும் ஆயிரமாயிரம் அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் குருதேவரின் பதிலிகளாகவும், வாரிசுகளாகவும் அருளுலகில் செயல்படத் திருவுள ஒப்புதலும் குருவாணையும் பெற்றவர்கள் ஆவார்கள்'

### 2. சித்தர்நெறித் தத்துவ விளக்கமென்பது:-

'குருதேவருக்குள் நாம், நமக்குள் குருதேவர் என்ற பக்குவ நிலையை அடைவதுதான்'

### 3. சித்தர்நெறி எனும் சீவநெறியான இந்துமதம் என்பது:-

'ஆணும் பெண்ணும் இல்லற வாழ்வில் இனிதே இணைந்து குழந்தை குட்டிகளுடன் குருவழியாகப் பத்தி செய்து முத்தி பெறுவதேயாகும்'

-- முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியான ஆதிசிவனுரின் குருபாரம்பரிய வாசகங்கள்.

*[5.4.88 அன்று குருதேவர் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியால் வெளியிடப்பட்டது.]*



சென்னை, காரணேடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Siddhar Arasayogi Karuvooraar.
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed by Kavin Printers, Madurai